**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : சரவணகுமார்**

**தேதி 01.12.2025 நேரம் மாலை 6.10 மணி**

---

தலைப்புச் செய்திகள்

இந்தியா பொருளாதார சுதந்திரத்திற்காக மட்டுமல்ல, உலக அரங்கில் அதன் பொருளாதார பங்கை விரிவுபடுத்தவதற்காகவும் முன்னேறி வருவதாக குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு தெரிவித்துள்ளார்.

நாட்டின் வளர்ச்சிக்கான முயற்சிகளுக்கு எழுச்சியூட்டும் தளமாக நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் திகழ்கிறது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

புகழ்பெற்ற நாகா கலாச்சாரத்தையும், அம்மாநில மக்களின் சேவை, தைரியம் ஆகியவை நாடு முழுவதும் போற்றப்படுவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

புதுச்சேரி பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த துறையின் உதவியாளர் பணிகளுக்கு நேரடி நியமனத்திற்கான பணியாணைகளை துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன், முதலமைச்சர் ரங்கசாமி ஆகியோர் இன்று வழங்கினர்

குடியரசு தலைவர் (13)

இந்தியா பொருளாதார சுதந்திரத்திற்காக மட்டுமல்ல, உலக அரங்கில் அதன் பொருளாதார பங்கை விரிவுபடுத்தவதற்காகவும் முன்னேறி வருவதாக குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு தெரிவித்துள்ளார். இன்று புதுடெல்லியில் உள்ள காலணி வடிவமைப்பு வடிவமைப்பு மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தின் பட்டமளிப்பு விழாவில் விழாவில் உரையாற்றிய அவர், 2024-25 நிதியாண்டில் 2 ஆயிரத்து 500 மில்லியன் டாலர்களுக்கும் அதிகமான மதிப்புள்ள ஏற்றுமதியில் காலணி காலணி தொழில் முக்கிய பங்கு வகிக்கிறது என்று கூறினார். நாட்டின்

நாட்டின் காலனி வணிகத்தின் ஏற்றுமதியை அதிகரிக்கவும், விரிவுபடுத்தவும், மாணவர்கள் சுய தொழில் முனைவோராகி, வேலை வேலை வாய்ப்பை உருவாக்குவது குறித்தும் அவர் வலியுறுத்தினார். அந்நிறுவனத்தின் 40 ஆண்டுகள் நிறைவை பாராட்டிய குடியரசு தலைவர், தலைவர், அடுத்த தலைமுறையின் திறமையான இளைஞர்கள் விக்சித் பாரத் 2047 என்ற கனவை நிறைவேற்றுவார்கள் என்று நம்பிக்கை தெரிவித்தார்.

நாடாளுமன்றம் 1 (11)

நாடாளுமன்ற குளிர் கால கூட்டத் தொடர் இன்று தொடங்கியது. நாட்டின் வளர்ச்சிக்கான முயற்சிகளுக்கு எழுச்சியூட்டும் தளமாக நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடர் திகழ்கிறது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார். மக்களவையில் மறைந்த முன்னாள் உறுப்பினர்களுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது. தொடர்ந்து, மாநிலங்களவையின் புதிய தலைவரான திரு சி பி இராதாகிருஷ்ணனை பிரதமர் வரவேற்றார். ஒரு சாதாரண பின்புலத்தில் இருந்து நாட்டின் குடியரசு துணைத் தலைவராக உயர்ந்திருக்கும் திரு சி பி இராதாகிருஷ்ணனை வரவேற்பது பெருமை மிகு தருணம் என்று கூறிய பிரதமர், அவரது வழிகாட்டுதலால் மாநிலங்களவை ஆக்கப்பூர்வமான விவாதங்களுடன் செயல்படும் என்று நம்பிக்கை தெரிவித்தார். நாடாளுமன்ற குளிர் கால கூட்டத் தொடர் குறித்த மேலும் சில தகவல்கள்........

நாடாளுமன்றம் 2 (16)

<u>நாடாளுமன்ற குளிர் கால கூட்டத் தொடர் இன்று தொடங்கிய நிலையில், வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தப்பணிகள் உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகள் குறித்து எதிர்கட்சிகள் அமளியில் ஈடுபட்டதால் மக்களவை பிற்பகல் 2 மணி வரை ஒத்தி வைக்கப்பட்டது. முன்னதாக, கேள்வி நேரம் தொடங்கியவுடன் எதிர்கட்சியினர் வாக்காளர் பட்டியல் தீவிர திருத்தப்பணிகள் குறித்து பிரச்சனைகளை எழுப்பியதற்கு அவை தலைவர் திரு ஓம்பிர்லா அவர்களின் நடவடிக்கைகளுக்கு அதிருப்தி தெரிவித்து, அவை அலுவல்களுக்கு ஊறு விளைவிப்பது முறையற்றது என்று குறிப்பிட்டார்.</u>

எதிர் கட்சியினரின் அமளிகளுக்கு இடையே, புகையிலை மற்றும் அது சார்ந்த பொருட்களுக்கான வரி சார்ந்த மத்திய கலால் சட்ட திருத்த மசோதா 2025-ஐ மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் அவையில் தாக்கல் செய்தார். புகையிலை பொருட்களுக்கான வரி தொடர்பான சுகாதார பாதுகாப்பு மற்றும் தேசிய பாதுகாப்பு சட்ட திருத்த மசோதா, மணிப்பூர் சரக்கு சேவை வரி சட்ட திருத்த மசோதா 2025-ஐயும் மத்திய அமைச்சர் அவையில் தாக்கல் செய்தார்.

நாடாளுமன்றம் 3 (11)

நாடாளுமன்ற வளாகத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய பிரதமர் திரு நரேந்திர மோடி, நாட்டின் பொருளாதார வளர்ச்சி புதிய உச்சங்களை எட்டி வருவதாகவும், வளர்ச்சி அடைந்த பாரதத்திற்கான புத்துணர்வுடன் கூடிய நம்பிக்கையை இது ஏற்படுத்தி உள்ளதாகவும் கூறினார். தேச வளர்ச்சிக்கு ஆக்கப்பூர்வமான மன நிலையின் அவசியத்தை வலியுறுத்திய பிரதமர் நாடாளுமன்றத்தில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட அடுத்த தலைமுறை இளைஞர்களுக்கு வாய்ப்புகளை உறுப்பினர்கள் வழங்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். இதனிடையே, பிற்பகல் 2 மணிக்கு அவை கூடியதும், எதிர்கட்சிகள் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி அமளியில் ஈடுபட்டதால், இரு அவைகளும் நாளை காலை 11 மணி வரை ஒத்திவைக்கப்பட்டன.

நாகாலாந்து 1 (18)

1963 ஆம் ஆண்டு இந்தியாவின் 16 ஆவது மாநிலமாக உருவான நாகாலாந்து மாநிலத்தின் 63 ஆவது உதய நாள் இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, முர்மு, அம்மாநில மக்களுக்கு தமது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார். தெரிவித்துள்ளார். நாகாலாந்து மாநிலம் ஒரு வளமான கலாச்சாரம் மற்றும் மற்றும் எல்லையற்ற இயற்கை அழகால் ஆசிர்வதிக்கப்பட்டுள்ளது என்று என்று அவர் தமது சமூக ஊடகப்பதிவில் குறிப்பிட்டுள்ளார். மேலும், அம்மாநிலத்தின் பழங்குடி, பன்முகத் தன்மை மற்றும் தனித்துவமான பாரம்பரியம் ஆகியவை பெருமைக்குரியதாக உள்ளது என்றும் திருமதி திரவுபதி முர்மு கூறினார். பிரதமர் திரு நரேந்திர மோடி வெளியிட்டுள்ள

வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், புகழ்பெற்ற நாகா கலாச்சாரத்தையும், அம்மாநில மக்களின் சேவை, தைரியம் ஆகியவை நாடு முழுவதும் போற்றப்படும் ஒன்றாக திகழ்வதாகவும் குறிப்பிட்டுள்ளார். வரும் ஆண்டுகளில் அம்மாநிலம் செழிப்புடனும், முன்னேற்றத்துடனும் வளர வேண்டும் என்றும் பிரதமர் கூறினார். மத்திய மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித்ஷா வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், நாகாலாந்தில் அமைதி, முன்னேற்றம், மற்றும் செழிப்பு ஏற்பட தாம் வாழ்த்துவதாக கூறியுள்ளார். நாகாலாந்து மாநிலத்தின் துடிப்பான மரபுகளும், அம் மக்களின் மீள் தன்மையும்,

*நாகாலாந்து* 2 (9)

நாட்டின் கலாச்சார கட்டமைப்பை வலுப்படுத்துவதாக அவர் தமது சமூக ஊடகப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

அம்மாநில ஆளுநர் திரு அஜய்குமார் பல்லா நாகாலாந்து மக்களுக்கு தமது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார். அமைதி, வளர்ச்சி, மற்றும் ஒற்றுமை தூண்களுக்கான புதுப்பிக்கப்பட்ட அர்ப்பணிப்புக்கு அம்மாநில மக்கள் பாடுபட வேண்டும் என்று வலியுறுத்தினார்.

மேலும் அம்மாநில முதலமைச்சர் திரு நெய்பியு ரியோவும், நாகா அடையாளத்தை பாதுகாத்து, அதன் எதிர்காலத்தை வடிவமைத்த தலைவர்களை தாம் வணங்குவதாக தமது சமூக வலைதள பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

*எஸ்ஐஆர்* (10)

நாட்டின் 12 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் சிறப்பு சிறப்பு தீவிர வாக்காளர் திருத்தப் பட்டியல் பணிகள் நடைபெற்று வருகிறது. இதுவரை மொத்தம், 50 கோடியே 83 லட்சத்து 16 ஆயிரத்து ஆயிரத்து 180 வாக்காளர் திருத்தப்படிவங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. விநியோகிக்கப்பட்டுள்ளன. இதில், திரும்ப பெறப்பட்ட, 45 கோடியே 1 1 லட்சத்து 47 ஆயிரத்து 595 வாக்காளர்களின் திருத்தப் படிவங்கள் தேர்தல் துறையின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதாக செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதில், புதுச்சேரியில், இதுவரை, 10 லட்சத்து, 16 ஆயிரத்து 423 வாக்காளர் திருத்தப் படிவங்கள்

படிவங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாகவும், இதில், 9 லட்சத்து 61 ஆயிரத்து 500 படிவங்கள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

*கைலாஷ்நாதன்-பணியாணை* (13)

புதுச்சேரி பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த துறையின் உதவியாளர் பணிகளுக்கு நேரடி நியமனத்திற்காக நடைபெற்ற எழுத்து தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு பணியாணைகளை வழங்கும் நிகழ்ச்சி இன்று காலை கம்பன் கலையரங்கில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு ரங்கசாமி, ஆகியோர் கலந்து கொண்டு, பணியாணைகளை வழங்கினர். நிகழ்ச்சியில், துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் விழாவில் பேசுகையில்……..

தொடர்ந்து முதலமைச்சர் திரு ரங்கசாமி பேசுகையில்…….

இந்நிகழ்ச்சியில் சட்டப்பேரவை தலைவர் திரு செல்வம், அரசு கொறடா திரு ஏகேடி ஆறுமுகம், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு சாய் ஜெ சரவணக்குமார், திரு அனிபால் கென்னடி, திரு கேஎஸ்பி ரமேஷ், திரு பாஸ்கர் (எ) தட்சணாமூர்த்தி, திரு லட்சுமிகாந்தன், திரு சிவசங்கரன், தலைமை செயலர் டாக்டர் சரத் சவுகான் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

*எயிட்ஸ் தினம்* (11)

உலக எயிட்ஸ் தினமான இன்று மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப குடும்ப நலத்துறை அமைச்சர் திரு ஜே பி நட்டா எச்ஐவி மற்றும் எயிட்ஸ் எயிட்ஸ் பற்றிய விழிப்புணர்வு அதிகரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து வலியுறுத்தினார். எச்ஐவி வைரஸ் பரவுவதை தடுக்கும் நடவடிக்கைகள் மற்றும் ஆரம்ப பரிசோதனையின் முக்கியத்துவம் ஆகியவை குறித்து அவர் தமது சமூக ஊடகப்பதிவில் குறிப்பிட்டுள்ளார். குறிப்பிட்டுள்ளார். மேலும், எச்ஐவி-யால் பாதிக்கப் பட்டவர்களுடன் ஒற்றுமையாக நிற்கவும், அதன் பரவல் குறித்த தவறான கருத்துக்களை தடுப்பது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதே இந்த நாளின்

நோக்கமாகும். சுகாதார பாதுகாப்பை சமமாக அணுகுவதை உறுதி செய்வதன் அவசியத்தையும், அனைவருக்கும் ஆரோக்கியமான மற்றும் மற்றும் நலமான எதிர்காலத்தை உருவாக்குவதையும் அவர் அடிக் கோடிட்டு காட்டினார்.

ஜி.எஸ்.டி (11)

பிரதமர் திரு நரேந்திர மோடி கடந்த செப்டம்பர் 22 ஆம் தேதி அறிவித்த ஜிஎஸ்டி சீர்திருத்தங்களால் நாட்டு மக்கள் பல்வேறு துறைகளில் பயனடைந்துள்ளனர். இதில், ஜவுளித்துறையில் புதிய ஜிஎஸ்டி சீர்திருத்தங்களின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ள வரிக் குறைப்பு சாமானிய மக்களின் நிதிச் சுமையை குறைத்துள்ளது. ஜவுளித்துறையில் செலவை குறைத்தல், தேவையை அதிகரித்தல் மற்றும் ஏற்றுமதியை மேம்படுத்துவதை நோக்கமாக கொண்டு இந்த ஜிஎஸ்டி வரிகுறைப்பு செய்யப்பட்டுள்ளது. இந்த வரிக்குறைப்புகளால் உலக சந்தைகளில் ஜவுளிகளின் ஏற்றுமதி போட்டித்தன்மையை மேம்படுத்துவதோடு உலகளாவிய ஜவுளி மையமாக இந்தியா உருவெடுக்க வேண்டும் என்பதே இந்த ஜிஎஸ்டி சீர்திருத்தங்களின் நோக்கமாகும்.

வானிலை (12)

தென்மேற்கு வங்க கடல் மற்றும் அதனை ஒட்டிய வடதமிழகம், புதுச்சேரி கடலோர பகுதிகளில் சென்னைக்கு தென் கிழக்கே 140 கிலோ மீட்டர் தொலைவில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுவிழந்துள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாமரை கண்ணன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார். இதன் காரணமாக இன்றும், நாளையும் தமிழகம், புதுச்சேரியில் ஓரிரு இடங்களிலும் இடி-மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என்றும், திருவள்ளுர் மாவட்டத்தின் ஓரிரு இடங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்பு உள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். மேலும் டிசம்பர் 3 ஆம் தேதி முதல் 6 ஆம் தேதி வரை தமிழகத்தின் சில இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என்றும், அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜெய்சங்கர் (8)

மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் இன்று புதுடெல்லியில் நடைபெற்ற உயிரியல் ஆயுத மாநாட்டின் 50 ஆண்டுகள் நிறைவு விழாவில் பங்கேற்று உரையாற்றினார். உலகளாவிய உயிரியல் பாதுகாப்பை வலுப்படுத்துதல் குறித்து இந்த மாநாட்டில் விவாதிக்கப்பட்டது. 80 க்கும் மேற்பட்ட நாடுகளை சேர்ந்த நிபுணர்கள், அறிஞர்கள் மற்றும் பிரதிநிதிகளுடன் அவர் கலந்துரையாடினார். சர்வதேச பாதுகாப்பு, உயிரியல் அறிவியலில் புதுமை, மற்றும் உயிரியல் அச்சுறுத்தல்களின் தன்மை ஆகியவை குறித்து டாக்டர் ஜெய்சங்கர் எடுத்துக் கூறினார்.